கண்டாலே நாவினிலே நீர் சுரக்கும் சட்டினியை
கை படாமல் அரைத்து உண்ண,
கேளாமலே வலியவந்து கிரைண்டரையும் மிக்சியையும்
இலவசமாய் கைகளிலே திணிக்கின்ற தமிழ் அரசு

கேட்டாலே குடல் குமற்றும் ஊர் மலத்தை
கையில் அள்ளி நாட்டினையே தூய்மை செய்ய
அருந்ததியர் கைகளிலே கூடையினை கொடுத்து
தலையினிலே மலம் சுமக்க பணிப்பதை பார்த்தீரா?

பழனி பஞ்ச அமிர்தத்தையே காலாலே மிதித்து செய்யும் நாட்டினிலே
ஊர் மலத்தை கையில் அள்ளி, தலையினிலே
பவ்வியமாய் சுமந்து செல்ல இது என்ன அருந்ததியர் இருமுடியோ?

குமரி முதல் இமயம் வரை நாட்டினிலே, போகும் இடம் எல்லாம்
மலம் பரப்பி விளிம்பு நிலை மனிதர்களை அள்ள வைக்கும்
இரயில் துறையை முற்றுகை இட்டிடுவோம், பயணிக்கு ஈ மூலம்
மலம் ஊட்டும் இரயில் துறை மந்திரியை சிறை பிடிப்போம் வாருங்கள்
பணம் இல்லை என்று அழுதால் விட்டுப்பிடித்திடலாம்
வஞ்சகமாய் மலக்குழியில் தள்ளப்பட்டு தத்தளிக்கும் மானிடனை
மீட்டெடுக்க இவர்களுக்கு மனம் இல்லை தோழர்களே.

ஆணை இடும் ஆட்சியரின் மனநிலையை மாற்றாமல் ,
நிறைவேற்றும் ஊழியராம் மாவட்ட ஆட்சியரை, நகராட்சி அலுவலரை
எதிர்த்து நின்று போராடி மல இழிவை ஒழிக்க ஒருக்காலும் இயலாது.

அமைச்சர்களை வரவேற்க பறை அடிக்கும் கரங்களிலே
பதாதைகளை ஏந்தி இழிவு ஒழிக்க வீதிகளில் இறங்கிடுவோம் வாருங்கள் .
மானிடனின் மனம் வெதும்ப மலம் அள்ள வைக்கும் ஆட்சியருக்கு
மனம் குளிர மணம் கமழும் மலர்களுக்கு பதிலாக
உலர் மலத்தை தூவி வரவேற்பு அளித்திடுவோம் வாருங்கள்

கோடிகளை செலவு செய்து நடத்துகின்ற கண்டனத்து மாநாட்டை
கண்டுகொள்ளாமல் பொறுத்துக்கொள்ளும் ஒரு அரசு
அமைச்சருக்கு எதிராக ஒரு அருந்ததிய சிறுவன் ஏந்தும் பதாதை
கண்டு பதரிப்போய்விடும் தோழர்களே, வாருங்கள்
உள்ளாட்சி அமைச்சர் போகும் இடம் எல்லாம்
இவ் வரவேற்பை அளித்திடுவோம்
ஓரிரண்டு ஆண்டுகளில் மல இழிவை முற்றிலுமே ஒழித்திடலாம்!!!

வேறு தொழில் செய்யாத மலம் அள்ளும் மக்களுக்கு,
வழக்கம் போல் வணிகம் செய்ய ஒருமறை வழங்கும் குறுந்தொகையை தவர்த்து
வாழ்நாள் முழுதும் சீரான மாத வருவாயை தரும் வகையில் ஊதியத்தை
அரசு வழங்கிவிட வலியுறுத்தி உறுதிமொழி பெற்றிடுவோம்.

இக்கவி வடிக்க உந்து கோலான
அண்ணன் அதியமானின் ஆதிதமிழர் பேரவைக்கு சமர்ப்பணம்.

-செல்வா